06 MAR '24

பள்ளிக் கல்வி – அரசு மற்றும் முழுமையாக அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயின்று, இடைநிலை, மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் மேல்நிலை இரண்டாம் ஆண்டுக்கான பொதுத்தேர்வில் தோல்வியுற்று, ஜூன் / ஜூலை துணைத் தேர்விற்கு விண்ணப்பிக்கும் மாணவர்களிடமிருந்து தக்கல் விண்ணப்பங்கள் பெறப்படும் நிலையில் அவர்களுக்கு மட்டும் தக்கல்முறை கட்டணத்தை இரத்து செய்தல் மற்றும் விண்ணப்பிக்கும் கால வரம்பினை 7-லிருந்து 15 நாட்களாக நீட்டித்து நிர்ணயம் செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வித் (அ.தே) துறை

அரசாணை (நிலை) எண்: 63

நாள் 04.03.2024
திருவள்ளுவர் ஆண்டு 2055
சோபகிருது வருடம், மாசி – 21

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.19, பள்ளிக் கல்வித் (வி1) துறை, நாள் 12.02.2003.
2. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கடித ந.க.எண். 101886/எச்1/2023, நாள் 23.01.2024 மற்றும் 21.02.2024.

......

**ஆணை:-**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மேல்நிலைத் தேர்வு தொடங்குவதற்கு முன்பாக ஒரு வாரகாலத்திற்கு முன்பு வரை விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளவும், இடைநிலை, மெட்ரிகுலேசன் மற்றும் ஆங்கிலோ இந்தியன் தேர்வுகள் தொடங்குவதற்கு முன்பாக ஒருவாரகாலத்திற்கு முன்பு வரை விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளவும், மேல்நிலைத் தேர்வுக்கும் விண்ணப்பிக்கும் தனித் தேர்வர்களிடமிருந்து தேர்வுக் கட்டணத்துடன் சேர்த்து சிறப்பு ஒதுக்கீட்டுக் கட்டணமாக ரூ.1000/- வசூலிக்கவும், எஸ்.எஸ்.எல்.சி / மெட்ரிக் / ஆங்கிலோ இந்தியன் தேர்வு / எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு விண்ணப்பிக்கும் தனித் தேர்வர்களிடமிருந்து தேர்வுக் கட்டணத்துடன் சேர்த்து சிறப்பு ஒதுக்கீட்டு கட்டணமாக ரூ.500/- வசூலிக்கவும், தக்கல் திட்ட தனித் தேர்வர்களுக்கு சென்னை மாநகரத்தில் மட்டும் தேவைக்கேற்ப தேர்வு மையங்கள் அமைத்து தேர்வினை நடத்தவும் அரசுத் தேர்வுகள் இயக்குநருக்கு அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

2. அரசுத் தேர்வுகள் இயக்குநர் தமது கடிதத்தில், மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி கடந்த கல்வியாண்டுகளில் துணைத் தேர்வுகளின் போது அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளிலிருந்து பெறப்பட்ட தக்கல் விண்ணப்பங்களின் விவரங்கள் பின்வருமாறு என தெரிவித்துள்ளார் :-

2023 அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளிலிருந்து பெறப்பட்ட தக்கல் விண்ணப்பங்களின் எண்ணிக்கை

| CLASS | MANAGEMENT | NUMBER OF CANDIDATES | AMOUNT (Rs) |
|---|---|---|---|
| Higher Secondary Second Year | Aided | 30 | 30,000 |
| | Government | 104 | 1,04,000 |

| | | | |
|---|---|---|---|
| Higher Secondary First Year | Aided | 154 | 1,54,000 |
| | Government | 375 | 3,75,000 |
| SSLC | Aided | 231 | 1,15,500 |
| | Government | 386 | 1,93,000 |
| TOTAL | | | 9,71,500 |

3. மேலும், அரசுத் தேர்வுகள் இயக்குநர் தமது கடிதத்தில் அரசு பள்ளிகள் மற்றும் அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளில் பயின்று மார்ச் / ஏப்ரல் பொதுத் தேர்வில் தோல்வியுற்று ஜூன் / ஜூலை துணைத் தேர்வுக்கு கால தாமதமாக பெறப்படும் விண்ணப்பங்களுக்கு தக்கல் கட்டணத்தை நீக்குவதன் மூலம் அரசு பள்ளிகள் மற்றும் முழுமையாக அரசு நிதி உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்கள் நலன் சார்ந்து ஜூன் / ஜூலை துணைத் தேர்விற்கு விண்ணப்பிக்கும் கால அளவினை 7 முதல் 15 நாட்களுக்கு நீட்டிக்கலாம் என்றும் மேலும், மேற்காண் மாணாக்கர்களில் மட்டும் மார்ச்/ ஏப்ரல் பொதுத் தேர்வில் தோல்வியுற்று அதே கல்வியாண்டில் ஜூன் / ஜூலை துணைத்தேர்விற்கு விண்ணப்பிக்கும் மாணாக்கர்களிலிருந்து தக்கல்முறை விண்ணப்பங்கள் பெறப்படும் நிலையில் அவர்களுக்கு மட்டும் தக்கல்முறை கட்டணத்தில் விலக்கு அளிக்க உரிய அரசாணை வெளியிடுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

4. அரசுத் தேர்வுகள் இயக்குநரின் கருத்துருவினை நன்கு பரிசீலித்து, அதனை ஏற்று மார்ச் / ஏப்ரல் பொதுத் தேர்வில் தோல்வியுற்ற மாணாக்கர்களுக்கு, ஜூன்/ஜூலை துணைத் தேர்விற்கு விண்ணப்பிக்கும் கால வரம்பினை 7-லிருந்து 15 நாட்களாக நீட்டித்து நிர்ணயம் செய்தும், மேலும் அரசு / முழுமையாக அரசு நிதி உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களில் மார்ச்/ஏப்ரல் பொதுத் தேர்வில் தோல்வியுற்று அதே கல்வியாண்டில் ஜூன் / ஜூலை துணைத்தேர்விற்கு விண்ணப்பிக்கும் மாணாக்கர்களிடமிருந்து தக்கல் முறை விண்ணப்பங்கள் பெறப்படும் நிலையில் அவர்களுக்கு மட்டும் தக்கல் கட்டணத்தில் விலக்கு அளித்தும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ.குமரகுருபரன்
அரசு செயலாளர்.

<u>பெறுநர்</u>
அரசுத் தேர்வுகள் இயக்குநர், சென்னை-6.
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை - 6.
தனியார் பள்ளிகள் இயக்குநர், சென்னை-6
<u>நகல்</u>
மாண்புமிகு பள்ளிக் கல்வி துறை அமைச்சர் அவர்களின்
நேர்முக உதவியாளர், சென்னை-6.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
5/3/14